# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கரூர்.
# வேலை வாய்ப்பு அறிவிப்பு எண்.01/2018/அ1

கரூர் குற்றவியல் நீதிமன்றங்களில் தமிழ்நாடு நீதித்துறை அடிப்படைப் பணியில் காலியாகவுள்ள கீழ்கண்ட பதவிகளுக்கு பணி நியமனம் செய்யும் பொருட்டு தகுதி தேர்வு நடைபெறவுள்ளது. இனச்சுழற்சி அடிப்படையில் தகுதி உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் கீழே குறிப்பிடப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் உரிய சான்றிதழ்களின் ஜெராக்ஸ் நகல்களை சுய சான்றொப்பத்துடன் (Self Attestation) இணைத்து பதிவு தபால் (ஒப்புகை அட்டையுடன்) மூலம் அனுப்ப வேண்டும்.

**அனைத்து பதவிகளுக்கும் வயது வரம்பு:- (01.11.2018)**

| வ.எண். | விண்ணப்பதாரர்களின் இன சுழற்சி வகைகள் | குறைந்தபட்ச வயது | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்கள்), பழங்குடி வகுப்பினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | **18 வயது** (பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்) | 35 வயதுக்குள் |
| 2. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | | 32 வயதுக்குள் |
| 3. | ஏனையோர் (அதாவது ஆ.தி., ஆ.தி(அ), ப.வ., மி.பி.வ., சீ.ம.,மற்றும் பி.வ.(முஸ்) ஆகிய வகுப்பினை சாராதவர்கள்) | | 30 வயதுக்குள் |

(வயது வரம்பு சலுகைகள் நடைமுறையிலுள்ள அரசாணைகள், அரசு விதிமுறைகளின்படி செயல்படுத்தப்படும்)

**I. பதவியின் பெயர் - அலுவலக உதவியாளர் - காலிப்பணியிடங்கள் - 2**

1. சம்பள ஏற்ற முறை ரூ.15700 – 50000 (தமிழ்நாடு 7வது ஊதிய குழு பரிந்துரையின் படி உள்ள சம்பளம் முறை)
2. கல்வித்தகுதி 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்
   கனரக, இலகுரக வாகனம் ஓட்டுநர் உரிமம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
3. காலியிட பகிர்வு (இன சுழற்சிமுறை) (14, 18)
   - பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்கள்)
   - பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்கள்) (பெண்கள்) (தமிழ்வழி கல்வி பயின்றவர்கள்)

….2...

**II. பதவியின் பெயர் - தோட்டப்பணியர் - காலிப்பணியிடம் - 1**

1. சம்பள ஏற்ற முறை ரூ.15700 – 50000 (தமிழ்நாடு 7வது ஊதிய குழு பரிந்துரையின் படி உள்ள சம்பளம் முறை)

2. கல்வித்தகுதி தமிழில் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

- பொது (முன்னுரிமையற்றவர்கள்)

**III. பதவியின் பெயர் - இரவு காவலர் - காலிப்பணியிடம் - 1**

1. சம்பள ஏற்ற முறை ரூ.15700 – 50000 (தமிழ்நாடு 7வது ஊதிய குழு பரிந்துரையின் படி உள்ள சம்பளம் முறை)

2. கல்வித்தகுதி தமிழில் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

3. காலியிட பகிர்வு (இன சுழற்சிமுறை) ( 8 )

- பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்கள்) (பெண்கள்) (ஆதரவற்ற விதவை)

**IV. பதவியின் பெயர் - துப்புரவு பணியாளர் - காலிப்பணியிடம் - 1**

1. சம்பள ஏற்ற முறை ரூ.15700 – 50000 (தமிழ்நாடு 7வது ஊதிய குழு பரிந்துரையின் படி உள்ள சம்பளம் முறை)

2. கல்வித்தகுதி தமிழில் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

- பொது (முன்னுரிமையற்றவர்கள்)

**V. பதவியின் பெயர் - மசால்சி - காலிப்பணியிடங்கள் - 4**

1. சம்பள ஏற்ற முறை ரூ. 15700 – 50000 (தமிழ்நாடு 7வது ஊதிய குழு பரிந்துரையின் படி உள்ள சம்பளம் முறை)

2. கல்வித்தகுதி தமிழில் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

3. காலியிட பகிர்வு (இன சுழற்சிமுறை) (6, 7 , 8 ,9)

- ஆதிதிராவிடர் (முன்னுரிமையுள்ளவர்கள்)
- மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்கள்) (பெண்கள்) (ஆதரவற்ற விதவை)
- பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்கள்) (பெண்கள்) (ஆதரவற்ற விதவை)
- பொது (முன்னுரிமையற்றவர்கள்)

…3…

**<u>விண்ணப்பிக்க கடைசி நாள்</u>**

விண்ணப்பங்கள் (ஒரு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு சுயசான்றொப்பத்துடன்) அனைத்து கல்விச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ் மற்றும் முன்னுரிமைக்கான சான்றிதழ்கள் (ஊனமுற்றோர், ஆதவற்ற விதவை மற்றும் கலப்புத் திருமணம் மற்றும் பிற) மற்றும் பிற சான்றிதழ்களின் நகல்கள் உரிய சுய சான்றொப்பத்துடனும் கீழ்க்காணும் முகவரிக்கு ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவுத் தபாலில் **10.12.2018-ம் தேதி மாலை 05.45** மணிக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

**தலைமை குற்றவியல் நடுவர்,**
**தலைமை குற்றவியல் நீதிமன்றம்,**
**ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,**
**தாந்தோன்றிமலை,**
**கரூர் - 639 007.**

(மேற்குறிப்பிடப்பட்டுள்ள கடைசி நாள், நேரத்திற்கு மேல் காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது).

மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்தி வைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யவோ தலைமை குற்றவியல் நடுவர், கரூர் அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது.

இத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரையை தவறாது படித்து பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. சொல்லப்பட்டுள்ள அறிவுரைகள் பின்பற்றப்படாமல் இருக்கும் பட்சத்தில், பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படும்.

**(ஒ/ம் பி.பார்த்தசாரதி)**
**தலைமை குற்றவியல் நடுவர்**
**கரூர்.**

**நாள்** : 26.11.2018
**இடம்** : கரூர்.

# <u>விண்ணப்பப் படிவம்</u>

பாஸ்போர்ட
அளவு
புகைப்படம்
உரிய சுய
சான்றொப்பததுடன்

1. விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் :
2. (அ) விண்ணப்பதாரரின் பெயர் (தமிழில்)
   (சான்றிதழில் உள்ளபடி)

   (A) Name of the Applicant (in English)
   (as per the Certificates)
3. தந்தை / கணவர் பெயர் :
4. பிறந்த தேதி
5. கல்வித் தகுதி :
   (8/10/12-ம் வகுப்பு சான்றிதழ்களின் நகல், மாற்றுச்சான்றிதழின் நகல் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். கூடுதல் கல்வித் தகுதிக்கு அதற்குரிய கல்வி சான்றிதழ்களின் நகல் இணைக்கப்பட வேண்டும்)
6. இனப்பிரிவு (சரியானதை குறியீடு செய்யவும்) (OC / BC / MBC / SC / ST)
7. ஜாதி (உட்பிரிவுடன்) :
8. தேசிய இனம் / மதம் (Nationality / Religion) :
9. பிறப்பிடம் :
10. திருமணமானவரா :
11. நிரந்தர முகவரி :

12. கணினியில் அடிப்படை தேர்ச்சி பெற்றவரா? :
    ஆம் / இல்லை. ஆம், எனில் அதன் விபரம்.
13. முன் அனுபவம் :
14. முன்னுரிமை கோருகிறீரா? :
    (ஆம் எனில் உரிய சான்றிதழின் நகல் இணைக்கப்பட வேண்டும்)
    1. ஆதரவற்ற விதவை
    2. மாற்றுத் திறனாளி
    3. முன்னாள் இராணுவ வீரர் / சார்ந்தோர்
    4. கலப்புத் திருமணம்
    5. மற்றவை

15. தமிழ்வழிக் கல்வி கற்றவரா? :

(ஆம், எனில் உரிய சான்றிழின் நகல் இணைக்கப்பட வேண்டும்)

16. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளீரா? :

ஆம், எனில் அதன் எண்ணைக் குறிப்பிடுக. (உரிய சான்றிதழின் நகல் இணைக்கப்பட வேண்டும்)

17. விண்ணப்பதாரரின் மேல் காவல்துறையில் வழக்கு ஏதேனும் நிலுவையில் உள்ளதா? :

18. இணைக்கப்பட்ட சுயசான்றொப்பதுடன் கூடிய சான்றிதழ் நகல்களின் விவரம். :

1) 8 ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்
2) 10 ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்
3) 12 ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்
4) இளங்கலை / முதுகலை பட்டப்படிப்பு
5) மாற்றுச் சான்றிதழ்
6) சாதிச் சான்றிதழ்
7) முன்னுரிமை சான்றிதழ்
8) தமிழ்வழிக் கல்வி சான்றிதழ்
9) வேலைவாய்ப்பு அடையாள அட்டை
10) ஆதார் அட்டை நகல் (அல்லது)
11) வாக்காளர் அட்டை நகல் (அல்லது)
12) ஓட்டுநர் உரிமம் நகல்
13) பிற சான்றிதழ்கள்.

(மேலே சொல்லப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மை என உறுதி கூறுகிறேன்.)

**நாள் :**

**இடம் :**

**விண்ணப்பதாரரின் கையொப்பம்.**

# விண்ணப்பதாரர்களின் கவனத்திற்கு

| | |
|---|---|
| 1 | விண்ணப்பங்கள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு, ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவுத் தபால் மூலமாக அனுப்பப்பட வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பம் செய்தால் தனித்தனி விண்ணப்பங்கள் தனித்தனி தபாலில் அனுப்ப வேண்டும். தபால் உறையின் மேல் எந்த பதவிக்கு விண்ணப்பம் அனுப்பப்படுகிறது என்பதை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். |
| 2 | பாஸ்போர்ட் அளவு புகைப்படம் விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு உரிய சுய சான்றொப்பத்துடனும் (by Self Attestation) விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். மேலும் சுய சான்றொப்பம் தவிர வேறு எந்தவிதமான சான்றொப்பம் பெறத் தேவையில்லை இருப்பினும், விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வின் போது அனைத்து அசல் சான்றிதழ்கள் மற்றும் ஆளறிச் சான்றிதழுடன் கலந்து கொள்ள வேண்டும். |
| 3 | அனைத்து தகவல் பரிமாற்றங்களும் (தேர்வு / நேர்காணலுக்கான அழைப்பு/ குறைபாடுள்ள விண்ணப்பம் / ஏற்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது) **https://districts.ecourts.gov.in/karur** என்ற இணையதள வலைதளத்தில் மட்டும் தகவல்கள் வெளியிடப்படும். வேறு எந்த வகையான முறையிலும் விண்ணப்பதாரருக்கு தனிப்பட்ட முறையில் தகவல்கள் தெரிவிக்கப்படமாட்டாது. எனவே விண்ணப்பதாரர்கள் மேற்கூறிய இணையதள வலைதளத்தை தொடர்ந்து கவனித்து தகவல்களை அறிந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. |
| 4 | அனைத்து சான்றாவணங்களின் நகல்கள் மட்டுமே உரிய முறையில் சுய சான்றெப்பமிட்டு (by Self Attestation) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றாவணங்கள் இணைக்கப்படக் கூடாது. உரிய சான்றாவணங்களின் நகல்கள் இணைக்கப்படாத நேர்வுகளில் அந்த விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். |
| 5 | முழுமையான பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்டுள்ள விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும். |
| 6 | விண்ணப்பதாரர் தனது இருப்பிட சான்று குறித்து ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, வங்கி கணக்கின் முதல் பக்கம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றின் நகலினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். |
| 7 | முன்னுரிமை கோரும் நேர்வுகளில் முன்னுரிமைக்கான உரிய சான்றிதழ்களின் நகல் சுய சான்றொப்பமிட்டு இணைக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் அந்த விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படும். |
| 8. | முன்னுரிமை கோருவதில் / வயது / கல்வித்தகுதிகளில் தவறான தகவல்கள் உள்ள விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். |
| 9. | விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட்ட விவரங்கள் மற்றும் இணைப்புகள் மட்டும் இறுதியானவையாக எடுத்துக் கொள்ளப்படும். அதன் பின்னர் எந்த கூடுதல் தகவல்களோ, இணைப்புகளோ, இணைக்கப்படவோ முன்னுரிமை கோரவோ அனுமதிக்கப்படமாட்டாது. |
| 10. | அலுவலக உதவியாளர் பணியிடத்துக்கு நேர்முக தேர்வு அல்லது எழுத்துத்தேர்வுடன் கூடிய நேர்முகத் தேர்வு பெறப்படும் விண்ணப்பங்களை பொறுத்து நிர்ணயிக்கப்படும். அதற்கான தகவல்கள் **https://districts.ecourts.gov.in/karur** என்ற இணையதள வலைதளத்தில் மட்டும் தகவல்கள் வெளியிடப்படும். |
| 11. | தோட்டப் பணியர், காவலர், துப்புரவு பணியாளர் மற்றும் மசால்சி ஆகிய பணியிடங்களுக்கு நேர்முக தேர்வு நடத்தப்படும். |
| 12. | தவறான தகவல்கள் உள்ள விண்ணப்பம் அல்லது தகவலை மறைத்து அனுப்பப்படும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் மற்றும் மாற்றம் செய்யப்பட்ட ஆவணம் அல்லது சான்று வைத்து அனுப்பிய விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்படுவார்கள் மற்றும் இனி வரும் காலங்களில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கரூர் நடத்தும் எந்த ஒரு தேர்விலும் கலந்து கொள்வதற்கு தடைசெய்யப்படும். |
| 13. | பதவி நியமன உத்தரவு தபால் மூலமும், இணையதளம் மூலமும் தெரிவிக்கப்படும். |